# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2008.01.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## இறைச்சிக்கடைக்காரர் (திருத்தம்)

**இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நிதி, திட்டமிடல் அமைச்சர் அவர்களினால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.25** **தபாற் செலவு : 5.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

இச்சட்டமூலமானது, இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தை திருத்த நாடுகின்றதென்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனாவது கருவுற்ற மற்றும் பால் கொடுக்கும் பசுக்களைக் கொல்லுவதை தடுப்பதும் தவறாளர்களை ஐம்பதினாயிரம் ரூபா அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு மறியற்றண்டனையினால் தண்டிக்கப்பட ஏற்பாடு செய்வதுமாகும்.

ச.வ.ஓ. 9/2008

## இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இறைச்சிக் கடைக்காரர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

272 ஆம் அத்தியாயத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (272 ஆம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(1) முறையான அதிகாரசபையிடமிருந்து அனுமதியொன்று இன்றி எவையேனும் கால்நடையைக் கொல்லுதல் எவரேனும் ஆளிற்கு (உரிமமளிக்கப்படாத இறைச்சிக்கடைக்காரரொருவர்) சட்டமுறையானதாதல் ஆகாது :

ஆயினும், கருவுற்ற அல்லது பால்கொடுக்கும் பசுக்கள் எவையும் அனுமதி ஒன்றின் அதிகாரத்தின் கீழோ அல்லது அன்றியோ கொல்லப்படுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவாக அப்பிரிவினை மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) பின்வரும் புதிய பிரிவு மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப்பின்னர் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) பதினெட்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுகளை மீறி கருவுற்ற பசு அல்லது பால்கொடுக்கும் பசுவை கொல்கின்றவரான எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஐம்பதாயிரம் ரூபா குற்றப்பணத்திற்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இரண்டிலொருவகையிலான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.".

*ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்